SLCAT

වධහිංසාවට එරෙහි ශ්‍රී ලංකා එකමුතුව

சித்திரவதைக்கு எதிரான இலங்கை ஒன்றிப்பு

SRI LANKAN COLLECTIVE AGAINST TORTURE

No: 288/135, Jayawardana Place, Baseline Road, Colombo - 09, Sri Lanka.

+94 112 669100 slcattorture@gmail.com www.slcat.org

பொலிஸ் மாஅதிபர்,

பொலிஸ் தலைமையகம்,

கொழும்பு 01

29/06/2021

**<u>காவலில் வைக்கப்பட்ட மரணங்கள் மற்றும் கைதிகளின் தன்னிச்சையான தடுப்புக்காவல் ஆகியவற்றைத் தடுக்கவும்</u>**

இலங்கையில் பெருந்தொற்றின் போது பொலிசாரின் நடவடிக்கைகள் தொடர்பில் கீழே ஒப்பமிட்டுள்ள நாங்கள் இலங்கைப் பிரசைகள் என்ற ரீதியிலும் சிவில் சமூக உறுப்பினர்கள் என்ற ரீதியிலும் எமது ஆழமான கரிசனைகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இது பாரிய மன அழுத்தமும் நிச்சயமின் ;மையும் நிலவுகின்ற காலப்பகுதி என்பதையும் கொரோனா வைரஸ் பரவாதிருப்பதை உறுதிப்படுத்தப் பொலிசாருக்கும் ஏனைய அரசாங்க அதிகாரிகளுக்கும் பொதுமக்களின் ஒத்துழைப்புத் தேவை என்பதையும் நாம் அறிவோம். எவ்வாறாயினும் , அவசரநிலைமைகளின் போதும் பிரசைகள் சட்டத்தினை மீறுகின்ற போதும் கூட அவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படக்கூடாது. இந்த அடிப்படை உரிமைகளுள் சித்திரவதையில் இருந்தும் கொடிய மனிதாபிமானமற்ற மற்றும் அவமானப்படுத்தும் தண்டனையில் இருந்தும் பூரணமான பாதுகாப்பும் சிந்தனைச் சுதந்திரமும் மனச்சாட்சிக்கான சுதந்திரமும் உள்ளடங்குகின்றன.

தன்னிச்சையான கைது மற்றும் தடுத்துவைப்பு, மறியற் சிறை மரணங்கள் மற்றும் சந்தேக நபர்களுடனான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் அதன் விளைவாக மரணம் ஏற்படலும் போன்ற மறியற் சிறை மீறல்கள் இடம்பெறும் பல சம்பவங்கள் பற்றிய முறைப்பாடுகளை நாம் அவதானித்துவருகின்றோம். குறிப்பாகப் பெருந்தொற்று நிலவும் காலப்பகுதியில் சுகாதாரக் காரணங்களினால் பிரசைகளின் உரிமைகள்

No: 288/135, Jayawardana Place, Baseline Road, Colombo - 09, Sri Lanka.
+94 112 669100 slcattorture@gmail.com www.slcat.org

கட்டுப்படுத்தப்படுகையில் இவ்வாறான சம்பவங்கள் பொதுமக்கள் மத்தியில் பதற்றத்தினையும் அமைதியின்மையினையும் ஏற்படுத்தலாம். எவ்வாறான மன அழுத்தத்தின் கீழ் பொலிசார் பணியாற்றுகின்றனர் என்பதை நாம் அறிந்துள்ள அதேவேளை, அரசியலமைப்பினால் பாதுகாக்கப்பட்டுள்ள பிரசைகளின் உரிமைகள் மீறப்படுவதற்கான நியாயப்படுத்தலாக அது ஒருபோதும் இருக்க முடியாது.

அரசாங்க ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளின் தெளிவின்மை காரணமாக அவசியமான உணவுப் பொருட்களை வாங்குதல் போன்ற தமது அடிப்படைத் தேவைகளைப் பொதுமக்கள் பூர்த்திசெய்ய முயற்சிக்கையில் அவர்கள் பொலிசாரினால் மோசமாக நடத்தப்படுகின்றனர். இதனை வீடியோக் காட்சிகளில் சான்றாகக் காண முடியும். சட்டத்தினை மீறுபவர்களுக்கு எதிராகப் பொலிசார் கட்டாயம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றாலும், அவ்வாறான நடவடிக்கை தன்னிச்சையானதாகவோ அல்லது குறிப்பிட்ட நபரின் அடையாளம் அல்லது சமூக அந்தஸ்தின் அடிப்படையிலானதாகவோ இருக்கக்கூடாது. அது நியாயமானதாகவும் ஒப்புரவானதாகவும் இருக்கவேண்டும்;. மேலும், பெருந்தொற்றில் உரிய கவனத்தினைச் செலுத்தும் அதேவேளை பெரும்பாலான மக்கள் ஏற்கனவே அனுபவித்துவரும் மிகச் சிக்கலான பொருளாதார நிலைமைகளைப் பொலிசாரின் நடவடிக்கைகள் மோசமாக்கக்கூடாது. உதாரணமாக, தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் சிறையிலடைப்பதற்கான மற்றும் தண்டிப்பதற்கான வழிகளாகப் பயன்படுத்தப்படாது தொற்றுநோய் பரவலைத் தடுக்கும் குறிப்பிட்ட குறிக்கோளை அடைவதற்கானதாக இருக்கவேண்டும்.

2021 ஜூன் 08 ஆம் திகதி வெளியிடப்பட்ட பொலிசாரின் ஊடக அறிக்கை பாரிய கரிசணைக்குரியதாகும். ஏனெனில் போலியான செய்திகளைப் பரப்புவதை நிறுத்துதல் என்ற போர்வையில் கருத்து வேறுபாட்டினையும்

கருத்து வெளிப்பாட்டுக்கான சுதந்திரத்தினையும் மௌனிக்கச் செய்வதற்குப் பயன்படுத்தப்படுவதற்கான சாத்தியத்தினை இது கொண்டுள்ளது. இது முறையாக வரைவிலக்கணப்படுத்தப்படாத ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ள சட்டத்தின் ஏற்பாடுகளைக் குறிப்பிடுகின்றது. இதன் அடிப்படையில் நபர்களைக் கைதுசெய்து பிணையின்றித் தடுத்துவைக்க முடியும். பிரசைகளின் மனித உரிமைகள் மீதான எவ்விதமான கட்டுப்பாடுகளும் சட்டத்தினால் மாத்திரம் குறித்துரைக்கப்படாது அரசியலமைப்புக்கு அமைவானதாகவும் இருக்கவேண்டும் என்பதுடன் விகிதாசாரமானதாகவும் கால வரம்பிற்கு உட்பட்டதாகவும் பாகுபாடற்றதாகவும் இருக்கவேண்டும்.

அரச அமைப்புக்களினால் அதிகாரம் து~;பிரயோகம் செய்யப்படல், சமூகத்தின் பலவீனமானவர்களுக்கு எதிராகவும் பாதிப்புறுநிலையில் உள்ளவர்களுக்கு எதிராகவும் மட்டும் சட்டம் தன்னிச்சையாகப் பயன்படுத்தப்படல் மற்றும் பலவீனமானவர்களையும் பாதிப்புறுநிலையில் உள்ளவர்களையும் பாதுகாக்க மறுத்தல் ஆகியவை அரசாங்கத்தின் மீதும் பொலிஸ் போன்ற அதன் முகவர்கள் மீதும் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை துரிதமாக இழக்கப்படுவதற்கு இட்டுச்செல்லும். சட்டம் தன்னிச்சையாகப் பயன்படுத்தப்படுவதற்கான உதாரணங்களுள் குருணாகல் மேயரின் பிறந்த நாள் கொண்டாட்டம் மற்றும் சங்கைக்குரிய இத்தேகந்த சத்தாதிஸ்த தேரரின் தாயாரின் மரணச் சடங்கு போன்ற சுகாதார ஒழுங்குவிதிகள் மீறப்பட்ட நிகழ்வுகளில் பொலிசாரின் பங்குபற்றல் உள்ளடங்குகின்றது.

வீட்டில் வன்முறைக்கு முகங்கொடுக்கும் பெண்களின் முறைப்பாட்டினைப் பொலிசார் ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற அதிர்ச்சியூட்டும் முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்துள்ளன. இது ஏற்கனவே பெண்கள் முகங்கொடுக்கும் வன்முறைகளை மேலும் அதிகரிக்கின்றன. பூரண விசாரணைகள் நடைபெற முன்னரே கைதுசெய்யப்படும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. உதாரணமாக, யசிரு குருவிட்டகேயின் கைதினைக் குறிப்பிடலாம். இவ்வாறான கைதுகள்;, குறிப்பாகப் பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் ஐஊஊPசு சட்டம் போன்ற சட்டங்கள் பயன்படுத்தப்பட்டமை, தடுத்துவைக்கப்பட்டுள்ளவரின் மீதும்

No: 288/135, Jayawardana Place, Baseline Road, Colombo - 09, Sri Lanka.
+94 112 669100 slcattorture@gmail.com www.slcat.org


அவரின் குடும்ப உறுப்பினர்கள் மீதும் ஏற்படுத்தும் பின்விளைவுகளைக் கருத்தில் கொள்ளவில்லை.

பிணை என்பது ஒரு விதிமுறையாகும், அது விதிவிலக்கல்ல எனும் விடயம் தொடர்பில் நாம் உங்களின் கவனத்தினை ஈர்க்க விரும்புகின்றோம். மேலும், சட்டத்தின் விசுவாசம் மற்றும் நோக்கத்திற்கு அமைவாக பொலிஸ் பிணையினை வழங்க முடியுமாக இருக்கையில் பொலிஸ் பிணையினை வழங்குமாறும் குற்றமானது பிணை வழங்கக்கூடியதாக இருந்து பிணைச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள விதிவிலக்குகள் பிரயோகிக்கத்தக்கவை அல்லாதவையாக இருப்பின் பிணைக்கு ஆட்சேபணை தெரிவிக்க வேண்டாம் என்றும் நாம் உங்களிடம் தாழ்மையாக வேண்டிக்கொள்கின்றோம்.

சட்டம் முழுமையாகப் பிரயோகிக்கப்படுவதற்கான உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற அக்கறையின் அடிப்படையில், தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களைச் சட்டத்தரணிகள் சந்திக்க அனுமதி வழங்கப்படுவதையும் பொலிசாரின் கண்காணிப்பு இன்றித் தனிப்பட்ட முறையில் கலந்தாலோசிப்பினை நடத்தக்கூடியதாக இருப்பதையும் உறுதிப்படுத்துமாறு கோரிச் சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அழைப்பிற்கு நாம் ஆதரவு வழங்குகின்றோம்.

இலங்கைப் பிரசைகள் அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அவர்களின் உரிமைகளைப் பயன்படுத்தக்கூடியவர்களாக உள்ளனர் மற்றும் அனுபவிக்கக்கூடியவர்களாக உள்ளனர் என்பதை உறுதிப்படுத்த நாம் பொலிசாரிடம் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்:

- அரசியலமைப்புக்கும் சம்பந்தப்பட்ட சட்டங்களுக்கும் இயைபுறல் மற்றும் சட்டமானது தன்னிச்சையான முறையிலோ அல்லது பாகுபாடுமிக்க முறையிலோ அமுல்படுத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தல்

- மறியற்சிறை மீறல் சம்பவங்களை உடனடியாக விசாரித்தல் மற்றும் விசாரணைகளில் இருந்து கண்டறிந்தவற்றினைப் பகிரங்கப்படுத்தல்

No: 288/135, Jayawardana Place, Baseline Road, Colombo - 09, Sri Lanka.
+94 112 669100 slcattorture@gmail.com www.slcat.org

- மீறல்கள், குறிப்பாக அரசாங்க அதிகாரிகளின் மீறல்கள் பற்றிய பொதுமக்களின் முறைப்பாடுகளைப் பொலிசார் ஏற்றுக்கொள்கின்றனர் என்பதை உறுதிப்படுத்தல்
- வீட்டு வன்முறை உள்ளடங்கலாகப் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்குப் பொலிசார் உரியமுறையிலும் தொழில் ரீதியாகவும் பதிற்செயற்பாடாற்றுகின்றனர் என்பதை உறுதிப்படுத்தல்
- சுகாதார ஒழுங்குவிதிகளை மீறல் போன்ற பெருந்தொற்றுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பாகச் சமுதாயத்துடன் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பது பற்றிப் பொலிசாருக்கு வழிகாட்டல்களை வழங்கல்
- நடமாட்டம் தொடர்பான ஒழுங்குவிதிகளில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களைப் பொதுமக்களுக்கு உடனடியாகவும் தெளிவாகவும் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தெரியப்படுத்தல்
- பெருந்தொற்றுத் தொடர்பான கட்டுப்பாடுகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் பிரசைகள் பயன்படுத்தக்கூடிய துரித தொலைபேசி இணைப்பினை (ஹொட்லைன்) ஏற்படுத்தல்

நன்றி,

பாடிய அமைப்புகள்,

1.அனுராதபுர குடிமக்கள் குழு.

2. கொள்கை மாற்றுகளுக்கான மையம்.

3.மனித உரிமைகள் மற்றும் மேம்பாட்டு மையம்.

4.டெமிந்து கூட்டு மையம்.

5.கண்டி மனித உரிமைகள் அலுவலகம்.

No: 288/135, Jayawardana Place, Baseline Road, Colombo - 09, Sri Lanka.
+94 112 669100 slcattorture@gmail.com www.slcat.org

6.ஹம்பாந்தோட்டை மனித உரிமைகள் முதலுதவி மையம்.

7.மனித உரிமைகள் தங்குமிடம்.

8.காலி மனித உரிமைகள் முதலுதவி மையம்.

9.தகவல் ஆவணப்படுத்தல் மையம்.

10.சட்டம் மற்றும் சமூகம் நம்பிக்கை.

11.தேசிய மீன்வள ஒற்றுமை மையம்.

12.தேசிய அமைதி சபை.

13.தேசிய ஒத்துழைப்பு மேம்பாட்டு அறக்கட்டளை.

14.சிவப்பு கொடி

15.வாழ்க்கை உரிமை மனித உரிமை மையம்.

16. ஜனநாயகத்திற்கான உரிமைகள் கூட்டு.

17.சட்ட மன்றத்தின் விதி.

18.கிராமப்புற பெண்கள்.

19.சுய சக்தி மையம்.

20.உன சக்தி மையம்.